புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கரிசல் இலக்கியமும் சோ.தர்மனும்

ரா.சுனிதா
பதிவு எண் 21113164022022,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி),
நாகர்கோவில்.

முனைவர் செ.செல்வ ஷோபா
நெறியாளர் & உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி),
நாகர்கோவில்.

ஆய்வுச் சுருக்கம்

கரிசல் இலக்கியம் என்பது இலக்கிய வகைப்பாட்டில் மண் சார்ந்த பொருட்களை குறிப்பிடுகிறது. மண் சார்ந்த மக்கள் வாழ்வியல் என்பது உலக நியதிகளில் ஒன்று மக்கள் தான் வாழும் நிலப்பரப்பில் வாழ்வாதாரங்களுக்காக உற்பத்தி பண்ணுகிற உணவு, வாழ்விட அமைப்பு, பிற உயிரினங்களோடு கொண்ட உறவு போன்றவை மண் சார்ந்த இலக்கியமாக அமைகின்றன. மானாவாரி காடுகள் அல்லது வானம் பார்த்த பூமி என்று மதுரைக்கு தென்பகுதியில் உள்ள நிலங்கள் அழைக்கப்படுகின்றன. இந்நிலத்தில் உற்பத்தியாகும் உணவுப் பொருட்களும் மொழியும் இயற்கையால் உருவாக்கப்பட்டவை. கரிசல் வட்டார எழுத்துக்கள் கரிசல் மண்ணின் வெப்ப சூட்டில் தானாகவே முளைத்தவையாகும். கரிசல் இலக்கிய எழுத்தின் முன்னோடி கு.அழகிரிசாமி இவரை தொடர்ந்து பலர் எழுதி இருக்கின்றனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் சோ.தர்மன் கரிசல் வட்டார சிறுகதைகள் கிராமியச் சூழலையும் அங்கு வாழும் மக்களின் உணர்வுகளையும் அவர்கள் வாழும் வாழ்க்கையின் அவலங்களையும் பிரதிபலிக்கின்றன. சோ.தர்மனின், எழுத்துக்களின் தூண்டுதல் கரிசல் நிலத்தில் நிகழ்ந்து வந்த தொடர் மாற்றங்களில் இருந்து எழுந்தது. வேளாண்மை தொழிலை அடிப்படையாகக் கொண்டது கரிசல் பகுதி ஆகும். அப்பகுதியில் பருத்தி முதலிய கரிசல் பயிர்கள் இழப்பு தருவனவாக ஆயின. சோ, தர்மனின் பெரும்பாலான நாவல்கள் உருளைக்குடி என்னும் அவருடைய சொந்த ஊரை களமாகக் கொண்டவை. கடந்த 50 ஆண்டுகளில் வேளாண்மையில் உருவான சரிவும் அதன் விளைவாக கிராமச் சமூக அமைப்பில் உருவான சிதைவும் அதன் வழியாக மானுட உறவுகளில் உருவாகும் சிக்கல்களுமே அவருடைய நாவலில் பேசு பொருள்.

## முன்னுரை

நாவல், சிறுகதை, வாழ்க்கை வரலாற்று நூல் போன்றவற்றை எழுதியிருப்பவர் சோ.தர்மன். உருளைக்குடி என்ற கிராமத்தைச் சேர்ந்த சோ.தர்மன் ஓர் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தொழிற்கல்வி படித்து முடித்துள்ளார். இவர் வாழ்ந்தப் பகுதி கரிசல் நிலப்பகுதி ஆகும். இந்த கரிசல் நிலம் என்பது விருதுநகர், சிவகாசி, சாத்தூர், இராசபாளையம் ஆகிய வட்டாரங்கள் உட்கொண்ட பகுதிகள். கோவில்பட்டி வட்டாரத்தின் சில பகுதிகளையும் உட்கொண்டிருப்பது காலங்காலமாக கரிசல் நிலத்தின் இயக்கம் வேளாண்மை தொழிலைச் சார்ந்து இருந்தது. சிறு சிறு நிலங்களில் மக்கள் உழைத்து வாழ்ந்தனர். பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இருக்கும் இடத்தில் எல்லாம் வறுமை தாண்டவம் ஆடவே செய்யும் ஆனால் உருளைக்குடி கிராமம் ஆரம்ப காலக்கட்டத்தில் இவற்றிற்கு முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்தது. ஆனால் அண்மைக்காலமாக தீப்பெட்டி தொழிற்சாலைகள் வந்தது நவீன உரங்கள், டிராக்டர், கூட்டுறவுச் சங்கம், கட்சி அரசியல் எனப் பலவும் வந்தன இதனால் மக்களின் தவிப்பு

பெருகியது. ஆயினும் மக்கள் உழைக்க தவறவில்லை. இந்த மக்களின் வாழ்க்கையை சோ.தர்மன் நாவல்களில் பதிவு செய்துள்ளார்.

கரிசல் நிலம்

தொல்காப்பிய பொருள் அதிகாரம் ஐந்து நிலங்கள் பற்றிய இலக்கியக் கோட்பாடு வகுத்துள்ளது. ஆயினும் நிலவியல் அடிப்படையில் தமிழ்நாட்டில் நான்கு நிலங்களையே அடையாளம் காட்டுகிறது. கரிசல் நிலம் என்ற ஒரு நிலத்தை அடையாளம் காட்டவில்லை. தமிழ்நாட்டில் இல்லாததாக தொல்காப்பியம் கூறும் பாலை நிலமா கரிசல் நிலம் அன்று அது ஒரு தனித்துவமான நிலம் இங்கு வறட்சியும் வாழ்க்கையும் இணைந்து இருக்கிறது.

காலம் காலமாக கரிசல் நிலத்தின் இயக்கமானது வேளாண்மையைச் சார்ந்தே உள்ளது. இதில் நவீன அறிவியலான உரவணிகம் அரசாங்கத்தால் உள்நுழைந்தது. விவசாயி தவித்துப் போகிறான். இந்த மாற்றம் குறித்து சோ.தர்மன் நாவல்களில் பதிவு செய்துள்ளார்.

கிராமங்களின் உற்பத்தி முறையில் சாகுபடி விதமும் நவீனமாய் இருக்கிறது. உழைப்பை மட்டுமே சார்ந்து நின்ற மக்கள் இப்போது உழவு, நவீன விதைகள், ரசாயன உரம், பூச்சி மருந்துகள் என்று பணச்செலவு செய்து விளைச்சல் காணுகின்ற புதிய முறைக்கு மாறியுள்ளனர் என்று கூறுவதை விட தள்ளப்பட்டு உள்ளனர் என்று கூறுவதே சரியாக இருக்கும்.

காலம் காலமாக வேளாண்மைத் தொழிலில் ஊன்றியுள்ள மக்களின் சமூக வாழ்வில் வேளாண்மைத் தொழிலுக்கு ஏற்றவாறு கட்டமைக்கப்பட்டுள்ள சாதியம், பெண்ணின் பங்கு நிலை ஆகியன குறித்தும் சோ.தர்மன் குறிப்பிட்டுள்ளார்.

கரிசல் உறவுகள்

கரிசல் நிலத் தோற்றத்தினையும் அந்நிலப் பின்னணியில் வாழும் மக்களின் உழைப்பையும் காட்டும் சோ.தர்மன் அதே வேளையில் உழைப்பின் ஊடாக வெளிப்படும் அவர்களின் உறவு நிலைகளையும் நாவலில் வெளிப்படுத்த தவறவில்லை. வாழ்க்கையை கரிசல் நில மக்கள் எளிமையாக கடுமையான சூழ்நிலையிலும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் என்ற எண்ணத்தை இப்பதிவுகள் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்.

அதற்கான ஒரு நிகழ்வினை தூர்வை நாவலில் காணலாம். மினுத்தான், மாடத்தி வீட்டில் வேலை செய்பவன் குருசாமி. ஒருமுறை மாடத்தி மினுத்தானே அழைத்து

“பிரிவு தெரிஞ்ச நாள்லருந்து நம்ம வீட்ல நாயா ஒழச்ச பய குருசாமிப் பய அவனுக்கும் ஒரு கல்யாணம் காட்சி முடிச்சி பாக்கல. தாய் தகப்பன் இல்லாத பய அவனும் நம்ம புள்ள தான் வாகமரத்துப் புஞ்ச நாலு குறுக்கத்தையும் கருப்பசாமி கோயில் தோட்டத்துல தெக்கடேசி மொடங்கி அரக் குறுக்கத்தையும் அந்தப் பய பெயருக்கு மாத்திரு.” (தூர்வை,ப.136)

என்று கூறினாள். தன் வீட்டில் வேலை செய்யும் ஒருவருக்கு சொத்தில் பங்கு கொடுக்கும் தன்மை கரிசல் உறவுகளிடம் காணப்பட்டது.

உழைக்கும் வர்க்கம்

தனது உழைப்பினை வழங்கி தேசத்தை காக்கின்ற மக்களை உழைக்கும் வர்க்கம் எனலாம். ஆனால் அந்த உழைப்பானது உயர் வர்க்கத்தினரால் சுரண்டப்பட்டு விடுவதால் உழைப்பவர் வாழ்வில் வறுமை நிரந்தரமாகி விடுகிறது.

உழைக்கும் வர்க்கம் உயர் சாதியினரின் இடத்தில் தான் உழைக்கின்றனர் ஆனால் அவர்கள் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படவில்லை தாழ்த்தப்பட்ட மக்கள் வேலை செய்கிறார்கள் ஆனாலும் அவர்களுக்கு அதற்கேற்ற வருமானம் இன்றி வறுமையில் வாடுகின்றனர். இதனை தனது கூகை நாவலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

சாதியக் கொடுமை

உயர் சாதி மக்களில் எவரேனும் இறந்துவிட்டால் அவர்களிடம் வேலை செய்யும் மக்களே துட்டிச் சொல்ல போக வேண்டும். குழி வெட்ட போக வேண்டும். இந்நிகழ்வினை கூகை நாவலில் காணலாம்.

*“சீனி உங்க மனசுல என்ன நெனச்சிருக்க மாட்டுச் சந்தைக்கு போன பாண்டி மாமா செத்துப் போயிட்டாரு. பொணம் வந்துகிட்டு இருக்கு பள்ளக்குடியிலப் போய்ப் பார்த்தா ஒரு பயலையும் காணோம் என்று கத்தினார்”.(கூகை, ப.22)*

*இவ்வாறு முத்தையா பாண்டி சீனியிடம் கூறியவுடன் சீனி ஒவ்வொரு சாதியினரையும் ஒன்று திரட்டி துட்டி வீட்டின் முன்னால் கொண்டு நிறுத்தினான். அவர்களும் தாங்கள் செய்த வேலைகளை அப்படியே போட்டுவிட்டு துட்டி வீட்டின் முன்னால் கூடினார்கள். பள்ளக்குடி, பறக்குடி, சக்கிலியக்குடி ஆட்களை ஒவ்வொரு பெயராய் கூப்பிட்டு எந்தெந்த ஊருக்கு போக வேண்டும் என்று சீட்டெழுதி பணமும் கொடுத்தார்கள். இவ்வாறு அங்கு நடைபெற்ற சாதியக் கொடுமை பற்றி விவரித்துள்ளார்.*

*சமூகநீதி*

*சமூகநீதி என்பது ஒரு தனி நபருக்கும் சமூகத்திற்கும் இடையே இருக்கும் உறவினைக் குறிக்கிறது. இதனை கூகை நாவலில் ஆசிரியர் நடராஜ ஐயர் பாத்திரம் வழியாக எடுத்துரைக்கிறார். நடராஜ ஐயர் தான் பட்டணம் செல்வதால் தன்னுடைய நிலங்களை உழைக்கும் வர்க்கத்திடம் ஒப்படைத்துவிட்டு சென்றார். அந்த நிலங்களில் மக்கள் உழைக்கத் தொடங்கினர் எவரும் பிறர் நிலங்களுக்கு வேலைக்குச் செல்லவில்லை. இதனால் அறுவடை காலத்தில் சண்டை ஏற்பட்டது. சமூகநீதி என்பது தனி நபர்களின் சமூக செயல்பாடுகளுக்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்து பாகுபாடற்ற நீதியையும், நியாயத்தையும் நிலை நிறுத்துவதாகும் .ஆனால் இங்கு உழைக்கும் வர்க்கத்தின் சமூக நீதியானது மறுக்கப்படுகிறது.*

*பெண்நிலை*

*பெண்ணின் இயல்பு வாழ்க்கை நிலையினை இரு வேறு வேறு கோணங்களில் சோ.தர்மன் நாவலில் குறிப்பிட்டுள்ளார். கூகை நாவலில் பெண்ணின் நிலையினை கருப்பியின் வழியாகச் சுட்டியுள்ளார். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த சண்முகப் பகடையின் மனைவி கருப்பி ஒடுக்கப்பட்ட இனத்தைச் சார்ந்த பெண் என்பதாலேயே அவள் வாழ்க்கை சீரழிக்கப்படுகிறது. முத்தையாப் பாண்டி சண்முகப் பகடையின் வீட்டிற்கு வருகிறான் அவனிடம் சிறிது காசினை கொடுக்க அதனை இரு கையேந்தி பவ்யமாக பெற்றுக் கொள்கிறான் சண்முகப் பகடை அவனை அனுப்பிவிட்டு முத்தையா பாண்டியன் செருப்பை கழற்றி வாசலில் வைத்தார். காவல் கம்மைக் கூரையில் படும்படி நட்டு தரையில் சாய்த்து வைத்துவிட்டு குனிந்து உள்ளே எட்டி பார்த்து நுழைந்தார். கருப்பி பருந்தைக் கண்டு பதுங்கும் கோழிக்குஞ்சு போல் பாயில் படுத்தும் முடங்கினாள்.*

*ஆனால் தூர்வை நாவலில் ஆசிரியர் குறிப்பிடும் பெண் இதற்கு முற்றிலும் மாறுபட்டவள். மாடத்தி.,*

*“காட்டையும் வீட்டையும் மலர்த்துகிற*
*விடியலாக*
*கொண்டவனின் வலுவாக*
*மதியூக யோசனைகளைக் கடத்துகிற ராஜதந்திரியாக*
*மனித வாசங்களை அரவணைத்துச் செல்லுகிற*
*ஆதித் தாயின் நிஜமாக*
*தன் முதுமையை எவருக்கும் பாரமேற்ற*
*விரும்பாது*
*ஆகாரம் நீக்கி ஆவியைப் போக்கிக் கொண்ட*
*உணர்வின் திடமாக*
*நம் தாய் வழிச் சமூகத்தின் அடையாளமும் நம்பிக்கையுமாக*
*ஒரு மாபெரும் அதிர்வு. மாடத்தி” (அன்புமணிவேல், பிப்ரவரி 2,2022)*

*இன்று ஆண்களுக்கு நிகராக பெண்களின் சம பங்கை, சம அதிகாரத்தை தன் வாழ்வை தானே தீர்மானித்துக் கொள்வதற்கு அவர்களுக்கு இருக்கின்ற முன்னுரிமையே தூர்வை நாவலில் மாடத்தி மட்டுமன்று முத்தையாவின் மனைவிமார்கள் தீத்தாம்பட்டி பாப்பா, குருசாமி*

மறுமணம் செய்து கொள்ளும் முத்தம்மாள் என்று பல பெண் பாத்திரங்கள் வழி காட்டப்பட்டுள்ளது.

மழையின்மை

மழை இல்லை என்றால் கரிசல் நிலம் என்னவாகும் என்பதனை தூர்வை நாவல் பதிவு செய்கிறது. மழை பெய்தது போதும் என்று கடவுளை வணங்கி மழையை திருப்பி அனுப்பிய காலம் மாறி இன்று மக்கள் வயல்களில் விதையை விதைத்து விட்டு மழைக்காக காத்திருக்கின்றனர். மழையின்மையை தூர்வை நாவலில் சோ.தர்மன் மழைக்கஞ்சி எடுக்கும் நிகழ்வாக பதிவு செய்துள்ளார்.

" மழயுமில்ல தண்ணியுமில்ல
மழக்கஞ்சியோ மழக்கஞ்சி
ஆடு மாடுக்கு தண்ணியில்ல
அம்மங் கஞ்சியோ அம்மங்கஞ்சி" (தூர்வை, ப.156)

ஊரில் உள்ள சிறுவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மழக்கஞ்சி எடுத்தார்கள். மழக்கஞ்சி என்பது வீடு வீடாகச் சென்று அவர்கள் போடுகின்ற பல வகையான சோறுகளை சட்டிகளில் நிறைப்பது ஆகும். அந்த மழக்கஞ்சியினை குடித்துவிட்டு பெண்கள் ஒப்பாரி வைத்து அழுதனர் ஆனாலும் மழை பெய்யவில்லை.

" முளைத்த விதைகள் நுனி சுருகி காய்ந்தன. கோரையும் பொடுதளையும் கூட காணவில்லை. கண்மாய் பெருகாததால் கிணறுகளில் தண்ணீர் கீழ் இறங்கியது. எல்லா சம்சாரிகளும் கண்ணைக் கட்டி காட்டில் விட்டவர்களைப் போல் நடைபிணமானார்கள்".(தூர்வை, ப.157)

தொழில்மாற்றம்

கரிசல் மண்ணின் தொழில் மாற்றம் என்பது நெல் பயிரிட்ட நிலங்களை கருவேல மரங்கள் ஆக்கியதிலும் மழைக்குறைவு மற்றும் நீர் பற்றாக்குறை எனும் இயலாமையான பொருளாதார தாக்கத்தால் நிலங்கள் தீப்பெட்டி தொழிற்சாலைகளாகவும், சாக்கு கம்பெனிகளாகவும் மாறியதிலும் நிகழ்கிறது.

உழவுத் தொழில்

உழவுத் தொழில் மேற்கொள்பவர்களுக்கு மிகுந்த மன உளைச்சலைத் தரக்கூடிய விஷயம் கடனும், தண்ணீரும் தான். இவ்விரு பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு 'விருவு' மற்றும் 'தூர்வை' கதைகளைப் புனைந்துள்ளார். இதில் கடன் தொல்லையோடு உழவுத் தொழில் சார்ந்த நடைமுறை வாழ்வியலையும் 'விருவு' கதையில் பதிவு செய்துள்ளார். விவசாய நிலங்கள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் தரிசாக மாறுவதனையும் மற்றும் தொழிற்சாலைகளாக மாறுவதனையும் 'தூர்வை' நாவலில் குறிப்பிட்டுள்ளார்.

தீப்பெட்டித் தொழிற்சாலை

கோவில்பட்டி பகுதி சார்ந்து இயங்கும் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலையில் வேலை செய்யும் மக்களின் வாழ்வியலில் உள்ள தழும்புகளை பதிவு செய்கிறது. தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை செய்யும் மக்களின் வாழ்வில் அதில் எப்பொழுது வேலை கிடைக்கும் எந்தெந்த காரணங்களுக்காக வேலை இல்லாமல் போகும் என்பதை 'ஈரம்' என்னும் கதை பதிவு செய்கிறது இவ்வேலை எப்படிப்பட்டது என்பதனை,

"என்ன பயவேல சாவாஞ் செத்த பய வேல, செத்துப் பொழைக்கிற மாதிரி செத்தனுமில்லாம பொழச்சனுமில்லாம". (ஈரம்,ப.103) என்ற கூற்றில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

இதே போல் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்கள் நிலை பற்றி 'தவம்' என்ற கதை பதிவு செய்துள்ளது. இதில் பெண்களுக்குள் நடைபெறும் உரையாடல்கள், சண்டைகள் குறித்தும் பேசப்பட்டுள்ளன. மேலும் குழந்தை பெற்ற தாய் மற்றும் குழந்தை படும் துயரங்களையும், அவலங்களையும் பதிவு செய்துள்ளார்.

அறவுணர்வு

கிராமத்து மக்கள் வெள்ளந்தி மனிதர்கள். இவர்களிடம் அறவுணர்வு மிகுந்து காணப்படும். வியாபாரம் என்றால் என்னவென்று தெரியாத தூய மனம் படைத்தவர்கள். ஒரு முறை

*காட்டுப்பூச்சி என்கிற சுப்பிரமணி ஊரைவிட்டு சென்று சில நாட்கள் கழித்து திரும்பி வந்தான் அவனிடம் கொப்புளாயி முதன்முறையாக சோற்றுக்கு என்ன செய்வாய் எனக் கேட்டபோது ,*
*“துட்டுக் குடுத்தா கடையில சோறு குடுப்பான் என்ன வேணும்னாலும் வாங்கி சாப்பிடலாம்”.(சூல், ப.164)*
*காட்டுப்பூச்சியின் இந்த பதில் கொப்புளாயியை நிலை குலையச் செய்தது.*
*“உழுது வெதைக்கோம், மழ பெய்யிது , வெள்ளாம வெளையிது. இதப் போயி துட்டுக்கு வித்தா மழ எப்படிப் பெய்யும்”.(சூல்,ப.165)*

*வியாபாரம் என்றால் என்னவென்று தெரியாதவர்கள் கிராமத்து மக்கள் காடுகளில் விளைகின்ற தானியங்கள் பயறு பச்சைகள், காய்கறிகள், கிழங்குகள் வத்தல், மல்லி என்று எல்லாவற்றையும் பிறருக்கு வாரிக் கொடுத்து வாழும் சம்சாரிகளில் ஒருத்தி, பண்டமாற்று தவிர்த்து இலாபம், நஷ்டம் என்ற வார்த்தைகளே கேள்விப்படாத ஜனங்களில் ஒருத்தியாக கொப்புளாயி இருந்தாள்.*

*முடிவுரை*

*சோ.தர்மன். அன்பின் சிற்பி, ஈரம், சோக வனம், வனக்குமாரன் உள்ளிட்ட சிறுகதை தொகுப்புகளையும், ஐந்து நாவல்களையும் வில்லிசை கலைஞர் பிச்சைக்குட்டி பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றையும் எழுதி உள்ளார் அவர் கதைகளில் பதிவாகியுள்ள கரிசல் வாழ்க்கையின் கூறுகளில் சில இக்கட்டுரையில் எடுத்தாளப் பட்டுள்ளன. கரிசல் நிலத்தோற்றம், கரிசல் நிலத்தின் வறட்சி, கரிசல் மக்களிடம் காணப்படும் சாதிய உணர்வு, பெண் நிலை, தீப்பெட்டி தொழிற்சாலை, கரிசல் மக்களின் அற உணர்வு ஆகியவை எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது சில சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது. இவை யாவும் பழைய மரபு வழி வந்த மரபு முறைகளால் வந்தவை இவையும் மாறுதல் பெற்று வந்தன. உழைப்பு உண்மை இவற்றோடு வாழும் வாழ்வோடு நவீன கால சமத்துவ உணர்வுகளும் ஆக எல்லாம் இணைந்த எளிய மனித வாழ்வே கரிசின் நில மக்களின் வாழ்வு.*

*துணை நூல்கள்*

*1.சோ.தர்மன்,(1994),ஈரம்,(முதற்பதிப்பு), சென்னை: சிந்து பதிப்பக அறக்கட்டளை*
*2.சோ.தர்மன்,(2016).சூல், (முதற்பதிப்பு), திருச்சி: அடையாளம் பதிப்பகம்*
*3.சோ.தர்மன்,(2020), கூகை, (இரண்டாம் பதிப்பு), திருச்சி: அடையாளம் பதிப்பகம்*
*4.சோ.தர்மன், (2020), தூர்வை, (இரண்டாம் பதிப்பு), திருச்சி: அடையாளம் பதிப்பகம்*
*5.முனைவர் துரை.சீனிச்சாமி, (2018), இலக்கியத் திறனாய்வில். சமூகவியல் அணுகுமுறை, (முதற்பதிப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*6.அன்புமணிவேல், பிப்ரவரி 2,2022, bookday.in*

********* ********* ********** ********* ********* ********** ********** **********